# தமிழ்மொழியும் இலக்கியமும்

## செயலட்டை 01 இலக்கியத்தொகுப்பு பகுதி III தரம் 10

01.நிதிப்பாடல்கள் என்றால் என்ன?

02. விவேகசிந்தாமணி தோற்றம் பெற்ற காலம் எது?

03. **“தண்டாமரையுடன் பிறந்தும் தண்டேன் நுகரா மண்டுகம்...**
அ. இங்கு மண்டுகம் என்பதன் கருத்து யாது?
ஆ. தண்டாமரை என்பதன் பொருள் யாது,?

04. **“பண்டே பழகி இருந்தாலும் அறியார் புல்லர் நல்லோரை...**
அ. இங்கு புல்லர் எனக் குறிப்பது யாரை?
ஆ. அறிவில்லாதவர் செயல் எவ்வாறு வெளிப்படுகிறது?

05. இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமையணிகளை விளக்குக.?

06. பாடலில், தவளை, வண்டு என்பவற்றின் இயல்புகள் எவ்வாறு புலப்படுகின்றன?

07. வெற்றிவேற்கை எனும் நூல் தோற்றம் பெற்ற காலம் எது? யாரால் இயற்றப்பட்டது?

08. **“அடக்கம் உடையார் அறிவிலார் என்று எண்ணிக்**
**கடக்கக் கருதவும் வேண்டாம் - மடைத்தலையில்”**
அ. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது? தோற்றம் பெற்ற காலம் எது?
யாரால் இயற்றப்பட்டது?

09. **“மடைத்தலையில் ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்**
**வாடி இருக்குமாம் கொக்கு...**
அ. இங்கு மடத்தலை என்பதன் கருத்து யாது?
ஆ. கொக்கு யாருக்கு உவமையாக கூறப்பட்டுள்ளது.
இ. உறுமீன் என்பதன் பொருள் யாது,?

10. இப்பாடலில் கூறப்படும் நீதிக் கருத்து யாது ?

11. இப் பாடலில், அடக்கமுடையவரின் செயல்/இயல்பு எவ்வாறு காட்டப்படுகின்றது ?

12. இங்கு இடம் பெற்றுள்ள அணியினை குறிப்பிட்டு விளக்குக?

13. **“ தேம்படு பனையின் திரள் பழுத்து ஒரு விதை**
**வான் உற ஓங்கி வளம் பெற வளரினும்...**
அ. இங்கு தேம்படு என்பதன் பொருள் யாது?
ஆ. வான் உற ஓங்கி வளம் பெற வளரினும்.. என்பதில் வெளிப்படும் அணி?

14. **“தெள் நீர்க் கயத்து சிறு மீன் சினையிலும் நுண்ணிதே ஆயினும்…**
அ. இங்கு கயம் என்பது உணர்த்தும் பொருள் யாது?
ஆ. சினை என்பதால் நீர் விளங்கிக் கொள்வது?

15 **அண்ணல் யானை அணிதேர் புரவி ஆள் பெரும் படையொடு...**
அ. அண்ணல் யானை என்பதன் கருத்து யாது?
ஆ. இங்கு வெளிப்படும் நாற்படைகளையும் குறிப்பிடுக?

16. பனைமரம், ஆலமரம் என்பவற்றின் இயல்புகளை குறிப்பிடுக?

17. **“கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கு அறுக்கும்**
**மூத்தோரை இல்லா அவைக்களனும்...**
அ. இங்கு கணக்காயர் எனக் குறிப்பது யாரை?
ஆ. பிணக்கறுத்தல் என்பது யாது?
இ. இப்பாடல் யாரால் இயற்றப்பட்டது?

18. **...............பிணக்கு அறுக்கும்**
**மூத்தோரை இல்லா அவைக்களனும்...**
அ. மூத்தோர் என்போர் யார்? அவைக்களன் என்பதன் பொருள் யாது?
இ. மூத்தோரிடம் எதிர்பார்க்கப்படும் கடமை யாது?

19. ஒருவர் வாழ்க்கைக்கு நன்மை தராதவை எவை என கூறப்படுகிறது.?

20. **“உப்பிலாக் கஞ்சியினை உண்ணும் அறுசுவை போல்**
**தப்பிய கந்தைப் பீதாம்பரம் போல...**
அ. தப்பிய கந்தை என்பதன் பொருள்?
ஆ. பீதாம்பரம் என்பது உணர்த்தும் கருத்து யாது?

21. இப்பாடலில் கூறப்படும் முதுமொழி யாது? அதன் பிரதான கருத்து யாது?

22. நாலடியார் நூல் பற்றி கருத்துரை வழங்குக

23. **“யானை அனையவர் நண்பு ஒரிஇ நாய் அனையார்**
**கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்...**
அ. இங்கு நண்பு ஒரீஇ என்பதன் கருத்து யாது?
ஆ. கேண்மை என்பதன் பொருள் யாது?
இ. எத்தகைய நட்பு சிறந்தது எனக் கூறப்படுகிறது?
ஈ. எத்தகைய நட்பு விலக்கப்படவேண்டும் எனக் கூறப்படுகிறது?

24. எத்தகைய நட்பினை தழுவிக் கொள்ள வேண்டும் என நாலடியார் கூறுகிறது? காரணம் யாது?

25. நாலடியார் எத்தகைய நட்பினை விலக்க வேண்டும் எனக் கூறுகின்றது? காரணம் யாது?

26. இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமையணிகளை விளக்குக.?

27. **கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே**
**மிக்காரை சேர்தல் மிகமான முன் இனிதே..**
அ. யாரின் முன்பாக கல்வி உரைத்தல் இனிமையானது?
ஆ.யாரை சேர்ந்திருத்தல் மிகவும் இனிமையானது?

28. இப்பாடலை இயற்றியவர் யார்?

29. **“எள்துணையானும் இரவாது தான் ஈதல்**
**எத்துணையும் ஆற்றல் இனிது...**
அ. எள்துணையும் என்பதால் கருதப்படுவது யாது?
ஆ. எத்துணையும் என்பதால் கருதப்படுவது யாது?
இ. ஈதல் என்பதன் ஒத்த கருத்து யாது?

30. ஓருவனுக்கு இனிமை தரும் செயல்கள் எவையென கூறப்படுகிறது?